தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சென்னையில் இடியுடன் கனமழை

**சென்னை**: சென்னையில் பரவலாக பலத்த காற்றுடன் இடியுடன் கூடிய கனமழை பெய்தது.

### ஐஸ் கிரீமுக்கு பயன்படும் 'அவக்கடா' சீசன் துவக்கம்: மலையில் வியாபாரிகள் முகாம்



**தாண்டிக்குடி:** ஐஸ் கிரீம், ஜூஸ் மற்றும் அழகுசாதன பொருட்கள் தயாரிக்கப் பயன்படும் அவக்கடா(பட்டர் ஃப்ரூட்) பழ சீசன் துவங்கியிருப்பதால், வெளிமாநில வியாபாரிகள் திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடியில் முகாமிட்டுள்ளனர்.

மலைபயிர்களில் ஊடுபயிராக பயன்படுத்தப்பட்ட அவக்கடா, இன்று விவசாயிகளுக்கு அதிக வருவாய் ஈட்டி தரும் பணப்பயிராக மாறியுள்ளது. துவக்கத்தில் இதன் பயன் தெரியாததால், தோட்டங்களில் ஊடுபயிராக சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்கினர். சில விவசாயிகள் மட்டும் தங்கள் தோட்டங்களில் இவற்றை பயிரிட்டனர். அறுவடை நேரத்தில் வெளிமாநில வியாபாரிகள், அவக்கடா பழங்களை வாங்கிச் செல்ல குவிந்த பின்தான் அதன் மகத்துவம் விவசாயிகளுக்கு தெரியவந்தது. அவக்கடா பழத்தின் சதை பகுதி கொழுப்பு சத்து

நிறைந்தது. இதிலிருந்து, ஐஸ்கிரீம், ஜூஸ் மற்றும் அழகு சாதன பொருட்களுக்கு பயன்படும் பேசியல் கிரீம், சோப்புக்கான மூலப்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. சந்தையில் இதன் விலை அதிகம் என்பதால் சீசன் துவங்கியவுடன் வெளிமாநில வியாபாரிகள், தாண்டிக்குடிக்கு வந்து விவசாயிகளிடம் முன்பதிவு செய்து வாங்கிச் செல்கின்றனர். தற்போது தாண்டிக்குடியில் அவக்கடா அறுவடை சீசன் துவங்கியுள்ளது. இதையடுத்து ஏராளமான வியாபாரிகள், தாண்டிக்குடியில் முகாமிட்டுள்ளனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்தது

**மேட்டூர்:** காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், தென்மேற்கு பருவ மழையின் தீவிரம் குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிந்தது. தமிழக - கர்நாடகா எல்லையிலுள்ள, காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், தீவிரம் அடைந்த தென்மேற்கு பருவ மழையால், மேட்டூர் அணைக்கு, நீர்வரத்து, 6ம் தேதி வினாடிக்கு, 7,198 கனஅடியாக அதிகரித்தது. அதற்கேற்ப, அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்தது. இந்நிலையில், பருவ மழையின் தீவிரம் குறைந்த தால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து, நேற்று, வினாடிக்கு, 3,324 கனஅடியாக சரிந்தது. எனினும், குடிநீருக்காக, வினாடிக்கு, 800 கனஅடி நீர் மட்டுமே வெளியேற்றுவதால், நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று, அணையின் நீர்மட்டம், 44 அடியாகவும்; நீர் இருப்பு, 14 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. ஒரு மாதத்தில், அணையின் நீர்மட்டம், 12 அடியும்; நீர் இருப்பு, ஆறு டி.எம்.சி.,யும் அதிகரித்து உள்ளது.

## கோதுமை கொள்முதல் இலக்கு தவறியது



மத்திய, மாநில முகமை அமைப்புகளின் கோதுமை கொள்முதல், நடப்பு, 2014 – 15ம் சந்தை பருவத்தில் (மார்ச் – ஜூன்), தற்போதைய நிலவரப்படி, நிர்ணயித்த இலக்கை (3.10 கோடி டன்) விட, 34 லட்சம் டன் குறைந்து, 2.76 கோடி டன்னாக சரிவடைந்துள்ளது. எனினும், இது, சென்ற பருவத்தின் கொள்முதலை ( 2.53 கோடி டன்) விட, அதிகம். மத்திய, மாநில முகமை அமைப்புகள், முக்கிய மாநிலங்களில் இருந்து, கோதுமை முழுவதையும் கொள்முதல் செய்து விட்டன. இம்மாத இறுதிக்குள், ராஜஸ்தான் மற்றும் உத்தர பிரதேசத்தின் சில பகுதிகளில் எஞ்சிய கொள்முதல் பணிகளும் முடிவடைந்து விடும்.சென்ற ஏப்ரலில், முகமை அமைப்புகளிடம், 1.70 கோடி டன் கோதுமை கையிருப்பில் இருந்தது. இதில், தற்போது கொள்முதல் செய்யப்பட்ட தையும் கணக்கிட்டால், 4.46 கோடி டன் கோதுமை இருப்பு உள்ளது. இதில், பொது வினியோக திட்டத்திற்கு, 3 கோடி டன் வினியோகம் செய்யப்படும் பட்சத்தில், வரும், 2015ம் ஆண்டு ஏப்ரலில், அரசு முகமை அமைப்புகளிடம், 1.46 கோடி டன் கோதுமை கையிருப்பு இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இது, நிர்ணயிக்கப்பட்ட உபரி அளவான, 70 லட்சம் டன்னை விட, அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.– பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து –

தோட்ட பயிர்கள் உற்பத்தியில் சாதனை: காய்கறி, பழங்கள் விலை கட்டுக்குள் இருக்கும்

புதுடில்லி:நடப்பு பயிர் பருவத்தில் (ஜூலை–ஜூன்), தோட்டப் பயிர்கள் உற்பத்தி, சாதனை அளவாக, 28.07 கோடி டன்னை எட்டும் என, மத்திய வேளாண் அமைச்சக புள்ளிவிவரத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. வெங்காயம்:இதனால், வெங்காயம், தக்காளி, உருளைக்கிழங்கு, கத்திரி, ஆப்பிள், வாழைப்பழம் உள்ளிட்ட, தோட்டப் பயிர்களின் விலை கட்டுக்குள் இருக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பு பருவத்தில், தோட்டப் பயிர்கள் பயிரிடும் பரப்பு, 2.53 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, முந்தைய பருவத்தில், 2.37 கோடி ஹெக்டேராக இருந்தது.பயிரிடும் பரப்பு அதிகரித்துள்ளதால், இதே காலத்தில், தோட்டப் பயிர்கள் உற்பத்தி, 26.88 கோடி டன்னிலிருந்து, 28.07 கோடி டன்னாக உயர்ந்து, சாதனை படைக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டு மொத்த தோட்டப் பயிர்கள் உற்பத்தியில், உருளைக் கிழங்கின் பங்களிப்பு, 16.5 சதவீதமாக உள்ளது. நடப்பு பருவத்தில் இதன் பயிரிடும் பரப்பளவு, 1.99 கோடியிலிருந்து, 2.02 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது.இதனால், உருளைக்கிழங்கு உற்பத்தி, 4.53 கோடியில்இருந்து, 4.64 கோடி டன்னாக அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.உருளைகிழங்கு:சென்ற நவம்பர்–டிசம்பர் மாதங்களில், பருவம் தவறிய மழையால், உருளை உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால், அதற்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, சில்லரை விற்பனையில், ஒரு கிலோ, 30 ரூபாயாக உயர்ந்தது. தக்காளி:நாட்டின் தோட்டப் பயிர் உற்பத்தியில், 10 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள, வாழைப்பழத்தின் உற்பத்தி, நடப்பு பருவத்தில், 2.65 கோடியிலிருந்து, 2.76 கோடி டன்னாக வளர்ச்சி காணும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

கத்திரிக்காய்: உற்பத்தி, 1.34 கோடியிலிருந்து, 1.39 கோடி டன்னாக அதிகரிக்கும் என, தெரிகிறது.வெங்காயம் பயிரிடும் பரப்பளவு, 1.05 கோடியிலிருந்து, 1.22

**கோடி ஹெக்டேராக உயர்ந்துள்ளதால், அதன் உற்பத்தி, 1.68 கோடி டன்னில் இருந்து, சாதனை அளவாக, 1.93 கோடி டன்னை எட்டும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.**

**நடப்பு பருவத்தில் தான், முதன் முறையாக, வெங்காயத்தை விட, தக்காளி உற்பத்தி குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தக்காளி உற்பத்தி, 1.82 கோடியிலிருந்து, 1.91 கோடி டன்னாக அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுஉள்ளது.**

**தேங்காய்:மேலும், பூ, தேங்காய், பாக்கு ஆகியவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், கோகோ, முந்திரி ஆகியவற்றின் உற்பத்தி குறைந்துள்ளது.நடப்பு பருவத்தில், மிளகாய் வற்றல், ஏலக்காய், மஞ்சள் உள்ளிட்ட நறுமணப் பொருட்களின் உற்பத்தி, 57 லட்சம் டன்னிலிருந்து, 58 லட்சம் டன்னாக உயரும்.அதேசமயம், மிளகு, பூண்டு, தனியா ஆகியவற்றின் உற்பத்தி, சிறிதளவு குறையும் என, வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

## வேளாண் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் வாழை, தேங்காய் ரூ.6.5 லட்சத்துக்கு ஏலம்

**கோபிசெட்டிபாளையம்:** கோபி, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், மொத்தம், 6.5 லட்சம் ரூபாயில், வாழைதார் மற்றும் முழு தேங்காய் ஆகியவை, ஏலத்தில் விற்பனையானது. ரஸ்தாளி, மொந்தன், பச்சநாடன், மோரீஸ், செவ்வாழை, பூம்பழம், தேன்வாழை போன்ற வகை பழங்கள், கொடுமுடி, கரூர், திருச்சி, தேனி ஆகிய மாவட்டங்களில், அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு, வாழைத்தார் விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இதற்காக, வாரத்தில், புதன் மற்றும், சனிக்கிழமைகளி ல், ஏலம் நடக்கும். கோபியில் நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், மொத்தம், 5,000 வாழைத்தார் வரத்தானது. கதளி ஒரு கிலோ, 38 ரூபாய்க்கும், நேந்திரம், 24 ரூபாய்க்கும் விலை போனது. செவ்வாழை

தார், 800 ரூபாய்க்கும், ரொபஸ்டா, 300 ரூபாய், தேன்வாழை, 450 ரூபாய், ரஸ்தாளி, 350 ரூபாய், மொந்தன், 275 ரூபாய், பூம்பழம் மற்றும் பச்சை நாடான் தலா, 250 ரூபாய்க்கு விலை போனது. விற்பனைக்கு வந்த அனைத்து தார்களும், மொத்தம், 5.5 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த தார்களை, திருப்பூர் மற்றும் ஊத்துக்குளி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் சென்றனர். இதேபோல், முழு தேங்காய்களுக்கான ஏலமும் நேற்று நடந்தது. மொத்தம், 9,000 தேங்காய்கள் வரத்தானது. ஆறு முதல், 12.50 ரூபாய் வரை விலை போனது. அனைத்து தேங்காய்களும், 90,000 ரூபாய்க்கு விற்பனையானது

## விதை பொருட்கள் வாங்க அலையும் விவசாயிகள்

மதுராந்தகம் : பெரும்பாக்கம் கிராம விவசாயிகள், விதை பொருட்கள் வாங்க நீண்ட தூரம் சென்று வரும் நிலை உள்ளது. அச்சிறுபாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்டது பெரும்பாக்கம் ஊராட்சி. இவ்வூராட்சியில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு, கடந்த, 25 ஆண்டுகளுக்கு முன் வேளாண்மை விதை பொருட்கள் விற்பனை கூடம் செயல்பட்டு வந்தது. பெரும்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாயிகள், இங்கிருந்து விதை பொருள் மற்றும் பயிர்களுக்கு தெளிக்கும் மருந்துகள் வாங்கி சென்று பயனடைந்தனர். நாளடைவில் இந்த விற்பனை கூட கட்டடம், பழுதாகி ஆங்காங்கே விரிசல் ஏற்பட்டது. மேலும் மழைக்காலங்களில், விரிசல் ஏற்பட்ட பகுதி வழியாக கட்டடத்தினுள் மழைநீர் ஒழுகியதால் மருந்துகள் மற்றும் விதை மூட்டை வீணாகி வந்தன. இதனால் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் இந்த கூடம், எல்.எண்டத்தூர் பகுதியில் உள்ள தனியார் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, இன்று வரையில் அங்குதான் செயல்பட்டு வருகிறது. இந்த கூடம் நீண்ட தொலைவில் இருப்பதால், விவசாயிகள், விதை பொருட்கள் வாங்கி வருவதில் பெரும் சிரமம் ஏற்பட்டு வருகிறது. எனவே, பெரும்பாக்கம் பகுதியில் பழைய கட்டடத்தை

இடித்துவிட்டு, அதே இடத்தில் புதிய கட்டடம் கட்ட வேளாண்மை துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும், என, விவசாயிகள் கோரிக்கை விடுத்து
உள்ளனர்.

## கோழி குஞ்சுகள் விற்பனை அதிகரிப்பு

**கச்சிராயபாளையம்:** கச்சிராயபாளையம் சுற்றியுள்ள பகுதிகளில் வான்கோழி, கின்னிகோழி, நாட்டு கோழி, போந்தா கோழி போன்ற கோழி குஞ்சுகளை விற்பனை செய்கின்றனர். இதற்காக பொள் ளாச்சி பகுதியில் மொத்தமாக கொள்முதல் செய்யப்படும், கோழி குஞ்சுகளை, வியாபாரிகள் இரு சக்கர வாகனத்தில் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இவர்கள் பிறந்து 2 மாதமான வான்கோழி குஞ்சுகள் ஜோடி 350 ரூபாய்க்கும், கின்னி, நாட்டுக்கோழி குஞ்சுகள் ஜோடி 250, போந்தா கோழி 120 ரூபாய்க்கும் விற்பனை செய்கின்றனர். வான்கோழி குஞ்சுகள் 6 மாதங்களில் 7 கிலோ எடை வரை வளர்வதாலும், உயர் வகை நாட்டுக்கோழிகள் அதிக விலைக்கு விற்பனையாவதாலும், பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

## மிளகாய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**விழுப்புரம்:** விழுப்புரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் மிள காய் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் வெண்டை, கத்தரி, மிளகாய் மற்றும் பாகற்காய் உள்ளிட்ட தோட்டகலைப் பயிர்கள் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் காய்கறிகள், சென்னை கோயம்பேடு காய்கறி மார்க்கெட்டிற்கு தினமும் லாரிகள் மூலம் எடுத்து சென்று

விற்பனை செய்கின்றனர். மேலும் சில வியாபாரிகள் விழுப்புரம், திண்டிவனம், புதுச்சேரிக்கும் எடுத்து சென்று விற்பனை செய்கின்றனர். வாரத்திற்கு ஒருமுறை மிளகாய்களை பறித்து விற்பனை செய்வதால், ஆட்களின் தேவையும் குறைவாக உள்ளது. மேலும் பச்ச மிளகாய் ஒரு கிலோ 20 முதல் 25 ரூபாய் வரை விலை போகிறது. இதனால் விழுப்புரம் வட்டாரப் பகுதிகளில் மிளகாய் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தி வருகின்றனர்.

## வெங்காய பயிரில் வைரஸ் நோய் தாக்கு

**முருக்கேரி**: முருக்கேரி அருகே வைரஸ் நோய்தாக்கியதில் வெங்காய தாள்கள் கருகியுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். திண்டிவனம் தாலுகா முருக்கேரி அடுத்த ஆலங்குப்பம், புதுப்பாக்கம் ஆகிய கிராமப்பகுதி விவசாயிகள் தர்பூசணி, மணிலா, நெல் போன்ற பயிர்கள் சாகுபடியை கைவிட்டுள்ளனர். இவற்றுக்கு மாற்றாக காய்கறி பயிர் செய்வதில் அதிக ஆர் வம் காட்டி வருகின்றனர். கடந்த மாதம் இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் பலரும், சாம்பார் வெங்காயம் சாகுபடி செய் வதற்காக வெங்காய நாற்றுவிட்டு நடவு செய்தனர். மழை பெய்திருந்தால் வெங்காய தாள்கள் அழுகி பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

அப்போது மழை பெய்யாததால் வெங்காயதாள்கள், செழித்து வளர்ந்தன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். வெங்காய அறுவடைக்கு இன்னும் 2 வாரம் உள்ள நிலையில் திடீரென வெங்காய செடிகளை வைரஸ் நோய் தாக்கியுள் ளது. இதனால் வெங்காய தாள்கள் கருகியுள்ளது. "ø க்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லையே' என்ற பழமொழிக்கு ஏற்ப, அறுவடை நேரத்தில் நோய் தாக்கியதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்

## கலப்பு தீவனம் தயாரிப்பது எப்படி? கால்நடை பயிற்சி மையத்தில் ஆலோசனை

**கோவை :** கறவை மாடுகளுக்கு பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதில், கலப்பு தீவனம், வீடுகளில் எளிய முறையில் தயாரிக்க, கால்நடை பயிற்சி மையத்தில் ஆலோசனை வழங்கப்படுகிறது.

கலப்பு தீவனத்தை, கடைகளில் வாங்கி மாடுகளுக்கு உணவாக கொடுப்பதை காட்டிலும், தீவனங்களின் அளவுக்கேற்ப வீடுகளிலே தயாரிக்க இயலும். மாடுகளின் செரிமான முறை, தீவனத்தில் உள்ள சத்துக்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு, எடைக்கேற்ப தயாரிப்பதன் மூலம், மாடுகளுக்கு சத்துள்ள மாற்று தீவனத்தை தயாரிக்க முடியும்.

கலப்பு தீவன தயாரிப்பு குறித்து, கால்நடை பயிற்சி மையத்தில், மாதிரிகள் தயாரிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதில், மலிவாக கிடைக்கும் தீவனங்களான, சோளம், மக்காச்சோளம், கம்பு, ராகி, அரிசி, புண்ணாக்கு, தவிடு, தாது உப்புகள் மற்றும் சமையல் உப்பு ஆகியவை கலந்து தயாரிக்கப்பட்டது. இந்த தீவன மாதிரியை, கறவை மாடுகளுக்கு உணவாக அளித்து, பால் உற்பத்தியின் அளவு கணக்கிடப்பட்டது. இதில், முன்பை காட்டிலும் அதிகளவு பால் உற்பத்தியாவதும், மாடுகள் ஆரோக்கியமாக இருப்பதும் கண்டறியப்பட்டது. கால்நடை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய அதிகாரிகள் கூறுகையில்,'10 கிலோ கலப்பு தீவனம் தயாரிக்க, நான்கு கிலோ தானியங்கள், மூன்று கிலோ புண்ணாக்கு, 2.75 கிலோ தவிடு, 200 கிராம் தாது உப்பு கலவை மற்றும் 50 கிராம் சமையல் உப்பு ஆகியவற்றை சேர்த்து, பொடியாக அரைத்து, மாடுகளுக்கு உணவாக கொடுக்கலாம்.'தீவன தட்டுப்பாடு ஏற்படும் சமயத்தில், மாடுகளுக்கு உணவாக கொடுப்பதால், சத்துக்குறைபாடு பிரச்னை ஏற்படுவதை பெருமளவு குறைக்க முடியும். கூடுதல் தகவலுக்கு, கால்நடை பயிற்சி மையத்தை நேரிலோ அல்லது 0422 266 9965 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்' என்றனர்.

## விவசாயிகளுக்கு திருத்தணி சர்க்கரை ஆலை ரூ.24 கோடி பாக்கி : கடன் அதிகரிப்பால் மீண்டும் கரும்பு பயிரிடுவதில் சிக்கல்

**திருத்தணி** : திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு, கொடுக்கப்பட வேண்டிய 24கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. ஐந்து மாதங்கள் ஆகியும் பணம் வராததால், வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமலும், மீண்டும் கரும்பு பயிரிட முடியாமலும் விவசாயிகள் தவிக்கின்றனர்.

திருவாலங்காட்டில், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது. இந்த ஆலைக்கு, திருத்தணி, ஆர்.கே.பேட்டை, அத்திமாஞ்சேரிபேட்டை, சாலை, அரக்கோணம் மற்றும் கனகம்மாசத்திரம் ஆகிய, ஆறு கரும்பு கோட்ட அலுவலகங்களில் இருந்து, 33 ஆயிரம் விவசாயிகள், பதிவு செய்து, கரும்பு அனுப்புகின்றனர்.கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கடந்த ஆண்டு, அக்டோபர் 4ம் தேதி முதல், கரும்பு அரவை தொடங்கி, கடந்த மார்ச் 10ம் தேதி வரை நடந்தது. மொத்தம், 2.,96 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டது.94 ஆயிரம் டன் வாரத்திற்கு ஒரு முறை, கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு ஆலை நிர்வாகம் தொகை வழங்கி வந்தது.இந்நிலையில், ஜனவரி 24ம் தேதி முதல், மார்ச் 10ம் தேதி வரை, கரும்பு ஓட்டிய விவசாயிகளுக்கு, 94 ஆயிரம் டன்னுக்கு, இதுவரைபில் தொகை வழங்கவில்லை.

மொத்தம், 350 விவசாயிகளுக்கு, 24 கோடி ரூபாய், தர வேண்டியுள்ளது. கரும்பு அரவை செய்து ஐந்து மாதங்கள் ஆகியும், இதுவரை விவசாயிகளுக்கு உரிய தொகை கிடைக்கவில்லை. இதனால், விவசாயிகள் கடும் அவதிப்படுகின்றனர்.கரும்பு பயிரிடுவதில் சிக்கல்

இதுகுறித்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் சிலர் கூறுகையில், 'நாங்கள், பயிரிட்ட கரும்புக்கு, ஒரு டன்னுக்கு, 650 ரூபாய் வீதம் வெட்டுக் கூலி கொடுத்து வெட்டி, கரும்பை ஏற்றி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு அனுப்பியுள்ளோம். ஆனால், எங்களுக்கு இதுவரை பில் தொகை வரவில்லை. இதனால், வங்கியில் வாங்கிய

கடனுக்கு வட்டியும் அதிகரிக்கிறது,' என்றனர்.மேலும், 'வங்கியில் மீண்டும் எங்களுக்கு கடன் கொடுக்க முடியாது என்கின்றனர். சிலர், உறவினர்களிடம் கடன் வாங்கி பயிர் செய்துள்ளோம். அவர்களது வீட்டிற்கும் செல்ல முடியவில்லை. நாங்கள் குடும்பத்தையும் நடத்த முடியாமல் தவிக்கிறோம். இதுதவிர, மீண்டும் கரும்பு பயிரிடுவதற்கு போதிய நிதியுதவி இல்லாமல், அவதிப்படுகிறோம்' என்றனர்.

அரசுக்கு பரிந்துரை கடிதம் திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாக இயக்குனர் மலர்விழி கூறியதாவது: பில் தொகை, 24 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. தற்போது ஆலை நிர்வாகத்தில் போதிய தொகை இல்லை. இதனால், விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய நிலுவை தொகை வழங்குவதற்கு, அரசிடம், வழிவகை கடன் தருமாறு, சர்க்கரை துறை இயக்குனர் மூலம் பரிந்துரை கடிதம் அனுப்பியுள்ளோம். இயக்குனரும், கடந்த வாரம், எவ்வளவு விவசாயிகளுக்கு தர வேண்டும் எவ்வளவு தொகை தர வேண்டும் என, விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பினார். அதற்கு, நாங்களும், நிலுவை தொகை மற்றும் விவசாயிகள் பெயர்கள் மற்றும் தொகை குறித்து விளக்கமாக எழுதி அனுப்பியுள்ளோம். அரசு, நிதி ஒதுக்கீடு செய்தவுடன் அனைவருக்கும் ஒரே நாளில், தொகை வழங்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## ஆத்தூர் மஞ்சள் ஏலம் ரூ.85 லட்சம் விற்பனை

**ஆத்தூர்:** ஆத்தூர், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த ஏலத்தில், 2,300 மூட்டை மஞ்சள், 85 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு கடலூர், நைனார்பாளையம், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், பெரம்பலூர் ஆகிய வெளி மாவட்டம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 1,000 விவசாயிகள் விளைவித்த 2,300 மூட்டை மஞ்சளை விற்பனைக்கு கொண்டு

வந்தனர். விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,449 ரூபாய், அதிகபட்சம், 7,559 ரூபாய், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,049 ரூபாய், அதிகபட்சம், 6,739 ரூபாய், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 10,179 ரூபாய், அதிகபட்சம், 15,809 ரூபாய்க்கு விற்பனையானது. 12 வியாபாரிகள் கலந்து கொண்டு, 2, 300 மூட்டை மஞ்சளை, 85 லட்சம் ரூபாய்க்கு வாங்கி சென்றனர்.

## தேயிலை ஏலத்தில் விலை வீழ்ச்சி

**குன்னூர் :** குன்னூரில் நடந்த தேயிலை ஏலத்தில் கிலோவுக்கு ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட்டது. குன்னூர் ஏல மையத்தில் 23வது ஏலம் நடந்தது. இதில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் பங்கேற்று தேயிலை தூளை ஏலம் எடுத்தனர். மொத்த 14.13 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இதில், இலைரகம் 9.58 லட்சமும், டஸ்ட் ரகம் 4.54 லட்சமும் இருந்தது. மொத்தம்78 சதவீதம் விற்பனையானது. கிலோவுக்கு 2 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. சி.டி.சி., ரகம் 188 ரூபாய், ஆர்த்தோடக்ஸ் 223 ரூபாய் என உயர்ந்தபட்ச விலை கிடைத்தது. சராசரி விலையாக இலை ரகத்திற்கு 50 முதல் 54 ரூபாய் வரையிலும், நல்ல ரகம் 100 முதல் 160 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்திற்கு 58 முதல் 60 ரூபாய் வரையிலும், நல்ல ரகம் 120 முதல் 180 ரூபாய் வரையிலும் விற்பனையானது.

## ஈரப்பதத்தில் விளைநிலம் மலர் சாகுபடியில் ஆர்வம்

**தாடிக்கொம்பு** : விளைநிலங்களின் ஈரப்பதத்தை பயன்படுத்தி வருவாய் அளிக்கும் மலர்களை சாகுபடி செய்வதற்கான முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தாடிக்கொம்பு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ஏராளமான விளை நிலங்கள் உள்ளன.

எதிர்பார்த்த அளவு கோடை மழை பெய்யாததால் பயிர் வகைகளை சாகுபடி செய்வதை விவசாயிகள் தவிர்த்துள்ளனர்.விளைநிலங்களின் தற்போதைய ஈரப்பதத்தை பயன்படுத்தி, மலர் வகைகளை சாகுபடி செய்வதற்கான முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர் நாள்தோறும் வருவாய் அளிக்கும் வாடாமல்லி, கோழிக்கொண்டை பூக்கள் பெருமளவில் நடவு செய்யப்பட்டுள்ளது. நாற்று நட்ட 45 நாளில் பலன்கிடைக்கும் என்பதால், ஆரம்ப கட்ட பராமரிப்பு பணிகளில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சென்னையில் இடி-மின்னலுடன் நள்ளிரவில் மழை**



**சென்னை,**

சென்னையில் நள்ளிரவு பரவலாக பலத்த காற்றுடன் திடீரென இடி-மின்னலுடன் கூடிய மழை பெய்தது. நள்ளிரவு தொடங்கிய மழை பயங்கர காற்றுடன் தொடர்ந்து பெய்தது, இதனால் சாலைகளின் ஆங்கேங்கே குளம் போல் தண்ணீர் தேங்கின. சென்னையில் அக்னிநட்சத்திரம் முடிந்த பிறகும் வாட்டி வதைத்த வெயிலின் தாக்கத்தால் அவதிப்பட்டு வந்த பொதுமக்கள், நள்ளிரவு பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கறிக்கோழி தொழிலை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்



சுல்தான்பேட்டை,

உற்பத்தி செலவை விட விற்பனை விலை குறைந்து வருகிறது. எனவே கறிக்கோழி தொழிலை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உற்பத்தி யாளர்கள், பண்ணை யாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். உற்பத்தி செலவை விட விற்பனை விலை குறைவு

சுல்தான்பேட்டை, பல்ல டம், உடுமலை, பொங்கலூர், ஈரோடு, நாமக்கல் உள்பட தமிழகத்தில் பல்வேறு இடங் களில் சுமார் 25 ஆயிரம் கறிக் கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. உற்பத்தி செய்யப் பட்ட கறிக்கோழிகள் தமிழகம், கேரளா, ஆந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு இடங் களுக்கு விற்பனைக்கு அனுப் பப்படுகின்றன. இந்த தொழிலை நம்பி நேரடியாக வும், மறை முகமாகவும் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் உள்ளனர். கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை பல்லடத்தில்உள்ள கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு சார்பில் தினமும் நிர்ண யம் செய்யப்பகிறது.கறிக்கோழி உற்பத்தி தொழில் கடந்த 3 ஆண்டு களாகவே பல்வேறு நெருக்கடி களை சந்தித்து வருகிறது. உற் பத்தி செலவைவிட விற்பனை விலை குறைவாகவே காணப் படுகின்றது. இதன்காரணமாக புதிய தொழில் முனைவோர்கள் இத்தொழிலை நடத்த முன் வருவதில்லை.ஒரு சிலர் வேறு வழி இல்லாமல் தொழிலை தொடர்ந்து நடத்தி வரு கின்ற னர். கறிக்கோழி தொழில் தொடர்ந்து நசிந்து வந்தால் பல ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பு இழக்கும் அபாய நிலை உள்ளது. விவ சாயத்தை அழிவில் இருந்து காக்க தற்போது மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருவது போல் கறிக்கோழி தொழிலையும் காப்பாற்ற அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே கறிக்கோழி உற்பத்தியாளர்கள் மற்றும் பண்ணை உரிமையாளர்களின் கோரிக்கையாக உள்ளது.அனைத்து சலுகைகளும் வழங்கவேண்டும்

**இதுகுறித்து உற்பத்தியாளர் கள், பண்ணையாளர்கள் கூறியதாவது:-**

**தமிழகத்தில் கறிக்கோழி உற்பத்தி தொழில் கடந்த 3 ஆண்டுகளாக நசிவை சந் தித்து வருகிறது. முதலில் முத லீடு செய்பவர்களுக்கு வங்கி யில் குறைந்த வட்டிக்கு கடன் கிடைக்காத நிலை ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக இத் தொழிலில் இருந்து சுமார் 20 சதவீதம் பேர் கைவிட்டு விட்டனர். பலர் விருப்பமின்றி இத்தொழிலை தொடர்ந்து செய்து வருகின்றனர். தொழி லில் தொடர்ந்து இதே நிலை யில் இருந்தால் தமிழ கத்தில் கறிக்கோழி உற்பத்தி தொழில் முழுமையாக அழிந்து விடும்.**

**உணவு தேவையில் ஒரு பகுதியை பூர்த்தி செய்தும், லட்சக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்பு அளித்து வரும் இத்தொழிலை நசிவில் இருந்து மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும.அரசுக்கு கோரிக்க விவசாயத்திற்கு குறைந்த வட்டியில் கடன் வழங்குவது போல் கறிக்கோழி தொழி லுக்கும் குறைந்த வட்டியில் வங்கி கடன் வழங்க வேண்டும். மானிய விலையில் கோழித் தீவனம் வழங்க வேண்டும். கறிக்கோழி உற்பத்தி பண்ணை களுக்கு இலவச மின்சாரம் வழங்க வேண்டும். கறிக்கோழி உற்பத்தி தொழிலையும் விவ சாய தொழிலாக நினைத்து விவசாயத்திற்கு வழங்கப் படுவது போல் அனைத்து சலுகைகளும் அரசுகள் வழங்க வேண்டும்.இதன் மூலம் கறிக்கோழி உற்பத்தி தொழில் நசிவில் இருந்து காப்பாற்றப் படும், மேலும் பல லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு தரும் தொழி லாக மாறும். இவ்வாறு அவர்கள் கூறி னார்கள்.**

**தற்போது கறிக்கோழி உற் பத்தியாளர்களுக்கு ஒரு கிலோ கறிக்கோழி உற்பத்திக்கு ரூ.5 முதல் ரூ.7 வரை நஷ்டம் ஏற்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.**

## கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடக்கம்: குமரி மாவட்டத்தில் சாரல் மழை



கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கியிருப்பதையொட்டி குமரி மாவட்டத்தில் சாரல் மழை பெய்து வருகிறது.

### திடீர் மழை

கேரளாவில் தென்மேற்குப் பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. இதனால் கேரளாவை ஒட்டி அமைந்துள்ள குமரி மாவட்டத்திலும் இம்மாத தொடக்கத்தில் இருந்து மழை விட்டு, விட்டு பெய்து வருகிறது. நேற்று முன்தினம் பகலில் மழை இல்லை. மாலையில் லேசாக மழை பெய்தது. குறைவான அளவிலேயே மழை அளவு பதிவாகி இருந்தது.

நேற்று காலை 9 மணி அளவில் நாகர்கோவிலில் திடீரென மிதமான மழை பெய்தது. இந்த மழை சுமார் அரை மணி நேரம் வரை நீடித்தது. இந்த மழையின்போது பலத்த காற்றும் வீசியது. இதனால் நாகர்கோவில் நகரப்பகுதியில்

குடைபிடித்துச் சென்றவர்கள் காற்றுடன் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. வெட்டூர்ணிமடம் பகுதியில் ஒரு மரம் முறிந்து விழுந்தது. மழை ஓய்ந்தபிறகும் வானம் கருமேகக்கூட்டங்களுடன், மப்பும், மந்தாரமுமாக நாள் முழுவதும் காட்சி அளித்தது. இடையிடையே சாரல் மழையும் பெய்தது. இதனால் நேற்று இதமான சூழ்நிலையே நிலவியது.

எச்சரிக்கை

இதேபோல் குமரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று காலை மழை பெய்தது. அதைத்தொடர்ந்து விட்டு, விட்டு மழை பெய்து கொண்டிருந்தது. குறிப்பாக கன்னியாகுமரி, கொட்டாரம், ஆரல்வாய்மொழி, தோவாளை, செண்பகராமன்புதூர், பூதப்பாண்டி, திட்டுவிளை, தெரிசனங்கோப்பு, அழகியபாண்டியபுரம், தடிக்காரன்கோணம், கடுக்கரை, காட்டுப்புதூர், தக்கலை, திருவிதாங்கோடு, மேக்காமண்டபம், அழகியமண்டபம், திங்கள்சந்தை, நெய்யூர், லெட்சுமிபுரம், மண்டைக்காடு புதூர், கொட்டில்பாடு, கோடிமுனை, சைமன்காலனி, குறும்பனை, ரீத்தாபுரம், குளச்சல் சுற்றுவட்டார பகுதிகள், கொல்லங்கோடு, கருங்கல், மார்த்தாண்டம், குழித்துறை, களியக்காவிளை, குலசேகரம், திருவட்டார், ஆற்றூர் போன்ற பகுதிகளிலும் மழை பெய்தது. சில இடங்களில் சாரல் மழையும், சில இடங்களில் மிதமான மழையும் பெய்திருந்தது.

இந்த மழையின்காரணமாக குமரி மாவட்டத்தில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. குளச்சல் கடல் பகுதியில் கடல் அலையின் உயரம் அதிகமாக இருந்து வருகிறது. எனவே குளச்சல் பகுதி மீனவர்களுக்கு மீன்வளத்துறை உதவி இயக்குனர் அலுவலகம் மூலமாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. அந்த எச்சரிக்கையில், "குளச்சல் கடல் பகுதியில் கடல் அலையின் உயரம் அதிகமாக இருப்பதால் இந்த பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் எச்சரிக்கையுடன் கடலில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

**கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழையினால் குமரி மாவட்ட அணைகளுக்கு பெரிய அளவில் நீர் வரத்தோ, நீர்மட்டம் உயர்வோ இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.**

## [கார்பைடுகல் மூலம் பழுக்க வைக்கப்பட்ட 1000 கிலோ மாம்பழங்கள் பறிமுதல்]



**மயிலாடுதுறையில் கார்பைடுகல் மூலம் பழுக்க வைக்கப்பட்ட 1000 கிலோ மாம்பழங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.**

**மாம்பழங்கள் பறிமுதல்**

**மயிலாடுதுறை அரசு ஆஸ்பத்திரிக்கு வயிற்றுபோக்கு தொடர்பாக நோயாளிகளின் வருகை அதிகரித்துள்ளதாக புகார் வந்தது. இதைத்தொடர்ந்து நாகை மாவட்ட கலெக்டர் முனுசாமி, தஞ்சை மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குனர் சாந்தி ஆகியோர் உத்தரவின் பேரில் மயிலாடுதுறை நகர் பகுதியில் நகராட்சி சுகாதார துறையினர் நேற்று திடீர் சோதனை மேற்கொண்டனர். அப்போது மாம்பழ குடோன் மற்றும் மாம்பழ விற்பனை நடைபெறும் கடைகளில் சோதனை செய்தனர். இதில் மாம்பழங்களை விரைவில் செயற்கையாக பழுக்க வைக்க கார்பைடு கற்கள் பயன்படுத்தப்பட்டது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து**

**நகராட்சி ஆணையர் (பொறுப்பு) பார்த்தீபன் மேற்பார்வையில் சுகாதார ஆய்வாளர் அறிவழகன், துப்புரவு ஆய்வாளர்கள் ராமையன், பழனிவேல் பிச்சமுத்து ஆகியோர் கொண்ட குழுவினர் சுமார் 1000 கிலோ மாம்பழங்களை பறிமுதல் செய்தனர்.**

**<u>சட்டப்படி நடவடிக்கை</u>**

**இது குறித்து நகராட்சி ஆணையர் கூறியதாவது:-**

**வணிக நோக்கத்திற்காக செயற்கையாக மாம்பழம் பழுக்க வைப்பதற்கு பயன்படுத்தப்படும் ரசாயன கற்களால் வயிற்றுபோக்கு, அஜீரண கோளாறு உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டு உடல் பாதிக்கப்படும். எனவே, பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட்டு இயற்கையாக பழுக்கும் மாம்பழங்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். வியாபாரிகள் சுகாதார கேடுகளை விளைவிக்கும் கார்பைட் கற்களை பயன்படுத்தி மாம்பழங்களை விற்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.**

## கோத்தகிரியில் தொடர் மழை: முட்டைகோஸ் பயிர்கள் அழுகும் அபாயம் விவசாயிகள் கவலை



**கொலக்கம்பை,**

**கோத்தகிரி பகுதியில் தற்போது பெய்து வரும் தொடர் மழையால் முட்டை கோஸ் பயிர்கள் அழுகும் அபாயம் ஏற் பட்டு உள்ளது.**

**<u>7 ஆயிரம் ஹெக்டர்</u>**

**நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்திற்கு அடுத்தபடியாக, இங்லீஸ் காய்கறிகள் விளைவிக்கப்படு கிறது. இங்கு சுமார் 7 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் பீன்ஸ், முட்டைகோஸ், உருளைக் கிழங்கு, காலிபிளவர், பீட்ரூட் உள்ளிட்ட பல்வேறு வகை யான காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.**

**இந்த காய்கறிகள் தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர் நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களுக்கும் அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் இங்குள்ள விவ சாயிகளுக்கு ஓரளவு வரு மானம் கிடைத்து வருகிறது.**

**<u>முட்டை கோஸ்</u>**

**இந்த நிலையில் கோத்தகிரி சுற்று வட்டார பகுதிகளான ஈளாடா, கூக்கல், மசக்கல், உயி லட்டி, பேரகணி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் தற்போது நிலவும் தட்ப வெட்ப நிலைக்கு ஏற்ற பயி ரான முட்டை கோஸ் பயிரை அதிகளவு பயிர் செய்துள்ள னர்.இந்த ஆண்டு உரிய நேரத்தில் மழை பெய்யாமல் பொய்த்து விட்டது. இதனால் நீரோடை கள் மற்றும் ஊற்றுகளில் வந்த சிறிது அளவு தண்ணீரை சேகரித்து வைத்து மோட்டர் மூலம் நீர் பாய்ச்சி முட்டை கோஸ் பயிரை விவசாயிகள் வளர்த்து வந்தனர்.**

**<u>அழுகும் அபாயம்</u>**

**ஆனால் கடந்த சில நாட்களாக இரவு, பகலாக பருவ மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி முட்டைகோஸ் பயிர்கள் அழுக துவங்கியுள்ளது. மழை காரணமாக அறுவடைக்கு தயாராகாத முட்டைகோஸ் களை விவசாயிகள் முன் கூட்டியே அறுவடை செய்து வருகின்றனர்.**

**இங்கு அறுவடை செய்யப் படும் முட்டைகோஸ் மேட்டுப் பாளையம், ஊட்டி, உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மொத்த காய்கறி மண்டிக்கு லாரிகள் மூலம் எடுத்து சென்று விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் மேட்டுப்பாளையத் தில் முட்டைகோஸ்க்கு உரிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரி வித்துள்ளனர்.**

**மழை இல்லாமல் அவதிப் பட்ட விவசாயிகள் தற்போது பெய்து வரும் மழையால் காய்கறிகள் அழுகி நஷ்டம் ஏற்படும் சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு உள்ளனர். எனவே அரசு கோத்தகிரி பகுதியில் உள்ள விவசாயி களுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என விவ சாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.**

<u>குன்னூர் அருகே பர்லியார் பகுதியில் பலாப்பழ விளைச்சல் அதிகரிப்பு</u>



**குன்னூர் அருகே பர்லியார் பகுதியில் பலாப்பழ விளைச்சல் அதிகரித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.**

**பர்லியார் அரசு பலாப்பண்ணை**

**மா, பலா, வாழை என்ற முக் கனிகள் சுவை தரும் கனி களாக உள்ளன. மனித உட லுக்கு இவை சக்தி தருவ தாகவும் இருந்து வருகிறது. முக்கனிகள் வரிசையில் பலாப் பழம் 2-ம் இடத்தை பிடித்துள் ளது. பலாப்பழம் தமிழ்நாடு, கேரளா போன்ற தென் மாநி லங்களில் அதிகமாக விளை விக்கப்படுகிறது.**

**குன்னூர்-மேட்டுப்பாளை யம் சாலையில் பர்லியார் அரசு பழப்பண்ணையிலும், தனியார் தோட்டங்களிலும் பலா மரங்கள் அதிக அளவில் உள்ளன. ஆண்டுதோறும் ஜூன், ஜூலை மாதங்களில் பலாப்பழ சீசன் தொடங்கு கிறது.**

**காட்டு யானை அட்டகாசம்**

**தற்போது கேரளாவிலும் சீசன் தொடங்கி உள்ளதால் பலாப்பழத்தின் வரத்தும் அதி கரித்து உள்ளது. பர்லியார் பகுதியில் பலாப்பழ விளை ச்சல் தற்போது அதிகரித்து உள்ளது. கடந்த ஆண்டு யானைக் கூட்டங்களின் அட் டகாசத்தால் பலாப்பழ சாகு படியில் ஈடுபட்ட விவ சாயி களுக்கு நஷ்டம் ஏற் பட்டது.**

**யானைகளின் நடமாட் டத்தை தவிர்ப்பதற்காக பலா காய்களை வெட்ட விவசாயி கள் அறிவுறுத்தப்பட்டனர். இதனால் பலாப்பழ விவசாயி களுக்கு நஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டு ஒற்றை யானை மட்டுமே குன்னூர்-மேட்டுப் பாளையம் சாலையில் சுற்றி திரிந்து வருகிறது.**

**இதனால் அதிக பாதிப்பு இல்லை என்று கூறப்படுகிறது. தற்போது பலாப்பழம் ஒரு**

**கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படு கிறது.**

**பர்லியாரில் பலாப்பழங் கள் அறுவடை செய்யப்பட் டால் ஊட்டி, குன்னூர் பகுதி களுக்கு கேரள மாநிலத்தில் இருந்து வரும் பலாப்பழங் களின் வரத்து குறையும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.**

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 3360 கன அடியாக குறைந்தது



**காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்த தொடர்மழை காரணமாக மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. தண்ணீர் வரத்து அதிகபட்சமாக வினாடிக்கு 7 ஆயிரம் கனஅடி வரை உயர்ந்தது. இதனால் அணையின் நீர்மட்டமும் அதிகரிக்க தொடங்கியது. இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக நீர்பிடிப்பு பகுதிகளில் மழைப்பொழிவு குறைந்தது. இதனால் நீர்வரத்தும் படிப்படியாக குறையத்தொடங்கி உள்ளது. நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு 3360 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. தண்ணீர் வரத்து மேலும் குறைந்தால் கடந்த 10 நாட்களாக உயர்ந்து வந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைய வாய்ப்பு உள்ளது.**

## கும்பகோணத்தில் சூறாவளிக்காற்றுடன் பலத்த மழை மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்தன



கும்பகோணத்தில் நேற்று முன்தினம் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதனால் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்தன.

### பலத்த மழை

தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணி அளவில் பயங்கர சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இந்த மழை சுமார் 1 மணி நேரம் பெய்தது.

சூறாவளி காற்றுடன் மழை பெய்ததால் கும்பகோணம் நகரில் கோர்ட்டு வளாகம், அரசு மருத்துவமனை, ஹவுசிங் யூனிட், பெசன்ட் ரோடு, பழைய பாலக்கரை, மடத்துத்தெரு, கல்லூரி சாலை, உள்ளிட்ட 100–க்கும் மேற்பட்ட இடங்களில் மரங்களும், அவற்றின் கிளைகளும் முறிந்து விழுந்தன. இதனால் மின்கம்பிகள் அறுந்து விழுந்தன. மின்கம்பங்கள் சாய்ந்ததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தாராசுரம் அம்மாப்பேட்டையில் ராஜா என்பவரின் வீட்டின் மீது மரம் விழுந்து வீடு சேதமடைந்தது. இதைப்போல கும்பகோணம் நகரில் பல இடங்களில் சூறாவளி காற்றால் வீட்டின் மேற்கூரைகள் காற்றில் பறந்தன.

<u>*சீரமைப்பு பணிகள்*</u>

கும்பகோணம் பெசன்ட் ரோட்டில் மூப்பனார் பங்களா அருகே இருந்த மிகப்பெரிய வேப்பமரம் அடியோடு சாய்ந்து மின்சார டிரான்ஸ்பார்மர் மீது விழுந்தது. இதனால் அப்ப குதியில் மின் விநியோகம் தடைபட்டது. சாய்ந்து விழுந்த மரத்தை பொக்லின் எந்திரம் மூலம் அகற்றும் பணி நடைபெற்றது.

மேலும் கும்பகோணம் பகுதியில் சுமார் 35 மின் கம்பங்கள் சேதமடைந்தன. எனவே சாய்ந்த மரங்கள் மற்றும் மின் கம்பங்களை சீரமைக்கும் பணிகள் நடைபெற்றன. இந்த பணியில் மின்சாரத்துறை, தீயணைப்புத்துறை, நகராட்சி ஊழியர்கள் மற்றும் நெடுஞ்சாலைத்துறையினர் ஈடுபட்டனர்.

<u>ராணுவ லாரி நசுங்கியது</u>

கும்பகோணம் அரசு ஆண்கள் கல்லூரியில் என்.சி.சி. மாணவர்களுக்கு கூட்டு பயிற்சி முகாம் நடை பெற்று வருகிறது. இந்த முகாமுக்கு தேவையான பொருட்களை இந்திய ராணுவத்தின் கீழ் இயங்கி வரும் கும்பகோணம் 8–வது பட்டாலியன் என்.சி.சி. படைப்பிரிவுக்கு சொந்தமான லாரியில் ஏற்றிக்கொண்டு டிரைவர் பாண்டியன் கல்லூரிக்கு சென்றார். அங்கு லாரியில் உள்ள பொருட்களை என்.சி.சி. மாணவர்கள் இறக்கி கொண்டிருந்தனர். லாரியில் டிரைவர் பாண்டியன் உட்கார்ந்திருந்தார்.

இந்நேரத்தில் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. அப்போது திடீரென விடுதி வாசலில் உள்ள 100 ஆண்டுகள் பழமையான மிகப்பெரிய வேப்பமரம் அடியோடு சாய்ந்து ராணுவ லாரி மீது விழுந்தது. உடனே சுதாரித்துக்கொண்ட பாண்டியன் அவசரமாக கீழே இறங்கி உயிர் தப்பினார். மரம் விழுந்ததில் லாரி நசுங்கி சேதமடைந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை.

<u>வாழை மரங்கள் சாய்ந்தன</u>

இதைப்போல தஞ்சை மாவட்டம் திருவோணம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை திடீரென பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இந்த நேரத்தில்

வீசிய பலமான சூறாவளி காற்றுக்கு தாக்கு பிடிக்க முடியாமல் வாழை மற்றும் சோளப்பயிர்கள் முறிந்து விழுந்து சேதமடைந்தன. இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் பொருளாதார நஷ்டத்துக்கு ஆளாகி வேதனையில் உள்ளனர். எனவே சேதமடைந்த வாழை மற்றும் சோளப்பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

## விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்க வேண்டும்

**பாபநாசம்,**

**தஞ்சையை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வழங்க வேண்டும் என்று பாபநாசம் இந்திய கம்யூனிஸ்டு ஒன்றிய குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.**

**ஒன்றியக்குழு கூட்டம்**

**பாபநாசத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஒன்றிய குழு கூட்டம் ராசு தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கிருஷ்ணன்¢, ஒன்றிய செயலாளர் குணசேகரன், ஏ.ஐ.டி.யு.சி. மாவட்ட தலைவர் தில்லைவனம், நிர்வாகிகள் இளங்கோவன், ரவி, ராஜேந்திரன், முருகேசன், ராஜா, தமிழ்செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**பாபநாசம் குளத்தை முழுமையாக தூர்வாரி குப்பைகளை அள்ளிய பிறகு கட்டுமான வேலைகளை முழுமையாக முடிக்க வேண்டும். பாபநாசம், அன்னுக்குடி, கோபுராஜபுரம், ஆகிய பாசன வாய்க்கால்களை உடனே தூர் வார வேண்டும். பாபநாசம் பேரூராட்சியில் உள்ள அனைத்து வடிகால்களையும் தூய்மைபடுத்த வேண்டும். இடிந்த நிலையில் உள்ள வடிகால்களை புதிதாக கட்டவேண்டும்.**

**வறட்சி மாவட்டம்**

**பாபநாசம் நகரத்தில் விபத்துகளை தடுக்க போக்குவரத்துக்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். பாபநாசம் ஒன்றியத்தில் வீட்டு மனை பட்டா கோரி விண்ணபித்த அனைவருக்கும் வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும்.**

**பாபநாசம் ரெயில் நிலையத்தில் மன்னை எக்ஸ்பிரஸ் ரெயில் மீண்டும் நின்று செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். மேட்டூர் தண்ணீர் இந்த ஆண்டும் திறக்காத நிலையில் தஞ்சையை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும், விவசாய தொழிலாளர்களுக்கு வேலையில்லா காலத்திற்கு உரிய நிவாரணமும் வழங்கவேண்டும்.**

**இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**காய்கறிகள் விலை தொடர்ந்து உயர்வு**

**சென்னை**

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் பெரும்பாலான காய்கறிகளின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், கேரளம், ஆந்திரம் உள்பட பல்வேறு மாநிலங்களிலிருந்து லாரி உள்ளிட்ட வாகனங்கள் மூலம் காய்கறிகள் தினமும் விற்பனைக்காக

கொண்டுவரப்படுகின்றன.

கத்திரி வெயிலையொட்டி காய்கறிகளின் விளைச்சல் மற்றும் வரத்து குறைவாக இருந்ததால் சென்னை மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் கடந்த வாரம் காய்கறிகளின் விலை வழக்கத்தைக் காட்டிலும் கிலோவுக்கு ரூ.3 முதல் ரூ.15 வரை விலை அதிகரித்திருந்தது.

இந்நிலையில் கத்திரி வெயில் முடிந்து ஜூன் மாதம் தொடங்கியும் வெப்பத்தின் தாக்கம் குறைந்தபாடில்லை. இதனால் பீன்ஸ், உருளைக்கிழங்கு, தக்காளி உள்பட பெரும்பாலான காய்கறிகளின் வரத்து கடந்த வாரத்தைக் காட்டிலும் குறைவாக இருந்தது. எனவே, பெரும்பாலான காய்கறிகள் கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.8 வரை மேலும் விலை அதிகரித்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டில் ஞாயிற்றுக்கிழமை காய்கறி விலை விவரம் (பழைய விலை அடைப்புக்குறிக்குள்)

பீன்ஸ் - ரூ.50 (37)

உருளைக்கிழங்கு - ரூ.25 (18)

அவரை- ரூ.45 (30)

பெரியவெங்காயம்- ரூ.26 (20)

சின்னவெங்காயம்- ரூ.32 (30)

தக்காளி- ரூ.18 (13)

பீட்ரூட்- ரூ.18 (20)

முருங்கை- ரூ.35 (30)

புடலை- ரூ.18 (13)

பச்சைப் பட்டாணி- ரூ.150 (60)

கேரட்- ரூ.25 (20)

காலிபிளவர்- ரூ.27 (23)

முட்டைக்கோஸ்- ரூ.12 (8).

**<u>மலர்த் தோட்டங்கள் பராமரிப்பு:ராம்கோ நிறுவனத்துக்கு முதல் பரிசு</u>**

**கொடைக்கானல்**

கொடைக்கானலில் நடைபெற்ற கோடை விழாவில், மலர்த் தோட்டங்களை சிறந்த முறையில் பராமரித்ததற்கான முதல் பரிசு, ராம்கோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

கொடைக்கானலில் நடைபெற்ற கோடை விழாவில், பூங்காக்கள் அமைத்தல், மலர் செடிகள் அமைத்தல், மலர்த் தோட்டங்கள் அமைத்தல், சிறந்த பூக்கள் வளர்த்தல், சிறந்த புல்வெளிகள் அமைத்தல் என்பன உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில், மலர்த் தோட்டங்களை சிறந்த முறையில் பராமரிப்பு செய்ததற்கான முதல் பரிசை, ராம்கோ நிறுவனம் பெற்றது.

மேலும், ரோஜா தோட்டத்துக்கு ஒரு சுழற்கோப்பை, புல்வெளித் தோட்டத்துக்கு ஒரு சுழற்கோப்பை, மலர் அலங்காரத்துக்கு 16 முதல் பரிசுகள், 20 இரண்டாம் பரிசுகள், 14 மூன்றாம் பரிசுகள் என மொத்தம் 50 பரிசுகள், ராம்கோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன.

வெற்றி பெற்ற நிறுவனங்களுக்குப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி, கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் நடைபெற்றது. இதில், கொடைக்கானல் வருவாய் கோட்டாட்சியர் ராமசாமி தலைமை வகித்து, பரிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சின்ராசு, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத் தலைவர் ராஜாங்கம், பேராசிரியை பரிமளா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சுற்றுலா அலுவலர் குணசேகரன் நன்றி கூறினார். இதில், பூங்கா மேலாளர் எபன்ராஜ், உதவி சுற்றுலா அலுவலர்கள் அன்பு, சதீஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**<u>சவ்சவ் சாகுபடிக்கு மாறிய அடுக்கம் பகுதி விவசாயிகள்</u>**

**திண்டுக்கல்**

அடுக்கம் பகுதியில் முதன்முறையாக தொடங்கப்பட்ட சவ்சவ் காய் சாகுபடியில், அதிக அளவு உற்பத்தி கிடைத்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் செல்லும் வழியில் அமைந்துள்ளது அடுக்கம் கிராமம். இந்த பகுதியில் காபி, ஆரஞ்சு, மிளகு, மலைவாழை உள்ளிட்ட மலைத்தோட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வந்தன. இந்த நிலையில், கொடைக்கானல் வட்டத்தின் பிற பகுதிகளான பண்ணைக்காடு, பூம்பாறை, கிளாவரை உள்ளிட்ட பகுதியில் விளையும் சவ்சவ் காய்களை, முதல் முறையாக அடுக்கம் பகுதியில் சாகுபடி செய்ய விவசாயிகள் முயற்சி மேற்கொண்டனர்.

தைப்பட்டத்தில் விதைத்து, 5 மாதங்களுக்கு பின் தற்போது சவ்சவ் காய்களை அறுவடை செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதல்முறையாக சாகுபடி செய்தபோதிலும், விளைச்சல் அதிகமாக உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இதுகுறித்து அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயி செல்வம் தெரிவித்தது:

வளமான மண்ணும், காற்றோட்டமான சூழ்நிலையும் சவ்சவ் செடிகளுக்கு அவசியம். ஒரு கொடியில் 500 முதல் 1000 காய்கள் வரை கிடைக்கும். அடுக்கம் பகுதியில் உள்ள மண் வளம் சவ்சவ் சாகுபடிக்கு ஏற்றதாக இருப்பதால், நல்ல உற்பத்தி கிடைத்துள்ளது.இருப்பினும் அறுவடை செய்துள்ள காய்களை, சந்தைக்கு எடுத்துச் செல்வதில் சிரமம் உள்ளது. அடுக்கம் பகுதியில் சுமார் 60 குடும்பங்கள் உள்ளன. அடுக்கத்திலிருந்து பெருமாள்மலை வரை செல்வதற்கு போதிய சாலை வசதி இல்லை. அடுக்கம் ஊராட்சி மன்ற அலுவலகம், பெருமாள்மலையில் உள்ளது. அதனால் உள்ளாட்சி நிர்வாகமும், சாலை அமைப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. சரியான சாலை வசதி அமைத்துக் கொடுத்தால், விளைப் பொருள்களை எளிதாக கொண்டு செல்ல முடியும் என்றார்.

## முதல் போக சாகுபடிக்கு 135 டன் விதை நெல் இருப்பு

**தேனி**

தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடிக்கு அரசு வேளாண்மை விரிவாக்க மையம் மற்றும் தனியார் விதைக் கடைகளில் மொத்தம் 135 டன் விதை நெல்

இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கோ.சுந்தரம் கூறியது: மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடிக்கு உகந்த ஏ.டி.டி.36, ஏ.டி.டி-45, என்.எல்.ஆர்.3439 ஆகியவை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

தனியார் உரம் மற்றும் விதை விற்பனைக் கடைகளில் வீரிய ஒட்டுரக விதைகளான கோரக்நாத் 59, ரஜினி, சுந்தர், மற்றும் மேக் ரகம் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. முதல் போக சாகுபடிக்கு மொத்தம் 135 டன் விதை நெல் இருப்பில் உள்ளது.

உயிர் உரங்களான அசோஸ்மைபரில்லம், மற்றும் நுண்ணுரங்கள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பில் உள்ளன என்றார்.

## ரசாயன கற்களால் பழுக்கவைக்கப்படும் மாம்பழங்களால் புற்றுநோய் அபாயம்

**ஆண்டிபட்டி**

ரசாயன கற்களால் பழுக்கவைக்கப்படும் மாம்பழங்களை உண்பதால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாகவும், மாம்பழங்களை கண்டறிந்து உணவு பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏப்ரல் மாதம் முதல் ஜூலை வரை மாம்பழ சீசனாக கருதப்படுகிறது. இந்தப் பருவத்தில் மாம்பழ விளைச்சல் அதிகரித்து அறுவடை செய்யப்படுகிறது. தேனி மாவட்டத்தில் பெரியகுளம், போடி மற்றும் ஆண்டிபட்டி பகுதிகளில் பல ஆயிரக்கணக்கான ஏக்கரில் கல்லாமை, பங்கனபள்ளி, செந்தூரம், காளையப்பாடி மற்றும் காசாலட்டு, மல்கோவா என பல்வேறு ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் இருந்து தினமும் தற்போது 50க்கும் மேற்பட்ட வாகனங்களில் மாம்பழங்கள் விற்பனைக்காக வெளியூர்களுக்கு செல்கிறது.

இயற்கையாக பழுக்க வைத்தல்: மாம்பழங்களை இயற்கையாகவே பழுக்க வைக்கும் முறையே சிறந்தது. அதாவது வைக்கோல் மற்றும் வேப்ப மரத்தின் இலைகளை போட்டு அதன் மேல் மாங்காய்களை வைத்து காற்று புகா இடத்தில்

வைத்து மூடி, நான்கு முதல் ஆறு நாள்களுக்கு பின்னர் எடுத்து விட்டால் மாங்காய்கள் பழுத்து விடும். இவ்வாறு பழுக்க வைப்பதால் பழங்கள் நல்ல சுவையுடன் இருக்கும். உடலுக்கு தீங்கு விளைவிக்காது. மேலும், விரைவில் அழுகி விடும் தன்மை கொண்டது. இதனால் வியாபாரிகள் இதனை எப்பொழுதும் விரும்பமாட்டார்கள்.

எத்திரில் முறைப்படி பழக்க வைத்தல்: எத்திரில் மற்றும் சோடியம் ஹைட்ராக்ஸிடு ஆகிய இரண்டு திரவங்களை சமஅளவில் எடுத்து மாங்காய்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளில் டப்பாவில் வைத்து விட்டால் ஆவியாகி மாங்காய்கள் மீது படிந்து பழுத்து விடும். மேலும் மாங்காய் மீது இவற்றை தெளிப்பதால் விரைவில் அழுகிவிடும் என்பதால் டப்பாவில் வைப்பது நல்லது. இவ்வாறு பழுக்க வைப்பதால் இயற்கை முறையில் பழுக்க வைப்பதற்கு ஈடானது, உடலுக்கு தீங்குஏற்படாது.

கால்சியம் கார்பைடு: தற்போது பெரும்பாலான வியாபாரிகளால் கால்சியம் கார்பைடு என்ற ரசாயன கற்களால் மாம்பழங்களை பழுக்க வைக்கின்றனர். அதாவது கால்சியம் கார்பைடு என்ற ரசாயன கல்லை மாம்பழங்கள் வைக்கப்பட்டுள்ள அறையில் பேப்பரில் கட்டி போட்டு விடுவார்கள் மறுநாள் காலையில் அறையை திறந்தால் அறையில் உள்ள மாங்காய்கள் அனைத்தும் சாம்பல் பூத்த மஞ்சள் நிறத்தில் காணப்படும்,ஆனால் காய்கள் போன்ற கடினத்தன்மையுடன் காணப்படும், சுவை இருக்காது.

இவ்வாறு பழுக்க வைப்பதால் உடலுக்கு தீங்கானது. அதாவது புற்றுநோயை உண்டாக்ககூடிய நச்சுப்பொருள்களை உண்டாக்குகிறது. மேலும் ஆர்சனிக் மற்றும் பாஸ்பரஸ் போன்ற உபரி நச்சுப்பொருள்களையும் உருவாக்குகிறது. இதனால் ரசாயன கல் வைத்து பழுக்க வைக்கும் நடைமுறை பல நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தேனி மருத்துவக்கல்லூரி முதல்வர் ஆர்.எம்.ராஜா முத்தையா கூறியது: மாம்பழங்களை கால்சியம் கார்பைடு என்ற ரசாயன கற்களை வைத்து பழுக்க வைக்கின்றனர். இவ்வாறு பழுக்க வைப்பதால் புற்றுநோயை உண்டாக்ககூடிய அசிட்டிலீன் என்ற நச்சுப்பொருள்களை உருவாக்குகிறது. மேலும் வயிற்றுபோக்கு மற்றும் வயிறுசம்பந்தப்பட்ட பல்வேறு உபாதைகளை

ஏற்படுத்துகிறது என்றார்.

சமூக ஆர்வலர் வி.ஆதிஜெகநாதன் கூறியது: தற்போது பெரும்பாலான இடங்களில் மாம்பழங்கள் கார்பைடு கற்களால் பழுக்க வைத்து விற்பனை செய்கின்றனர். இதுகுறித்து மாவட்ட நுகர்வோர் மற்றும் உணவுபாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கையும் எடுக்கவேண்டும் என்றார்.

## மீன் வள உற்பத்தி: இளநிலை புள்ளிவிவர சேகரிப்பாளர் பணிக்கு நேர்காணல்

**சிவகங்கை**

தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை மூலம் தமிழ்நாட்டின் கடல் மற்றும் உள்நாட்டு மீன்வள உற்பத்தி மற்றும் பயன்பாடு பற்றிய அளவைப்பணி மேற்கொள்ள இளநிலை புள்ளி விவர சேகரிப்பாளர் பணிக்கு சிவகங்கை மாவட்டத்தில் ஒருவர் நியமனம் செய்யப்படவுள்ளார்.

ஜூன் 2014 முதல் ஏப்ரல் 2015 வரை செயல்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் இப் பணிக்கான கல்வித்தகுதி பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு அல்லது பிளஸ் 2. இவற்றில் அறிவியல் சார்ந்த படிப்பு மற்றும் கணினி தொடர்பான அடிப்படை அறிவு பெற்றிருக்க வேண்டும். 2014 மே 31 அன்று 22 வயது உடையவராகவும், 40 வயதுக்குட்பட்டவராகவும் இருக்கவேண்டும்.

இப்பணிக்கு மாதம் ரூ. 6 ஆயிரம் தொகுப்பு ஊதியமாக வழங்கப்படும். மீனவ, மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினர் வாரிசுதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இப்பணிக்கு 10.06.2014 காலை 11 மணிக்கு சிவகங்கை மேலூர் சாலையில் உள்ள மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேர்காணல் நடைபெறவுள்ளது. விருப்பம் உள்ளவர்கள் அசல் சான்றிதழ்கள் மற்றும் ஒளிநகல்களுடன் கலந்துகொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 04575-240848 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு தெரிந்து கொள்ளலாம்.

## வாழைக்காய் ஏலம்:வரத்துக் குறைவால் விலை அதிகரிப்பு

**மேட்டுப்பாளையம்,**

மேட்டுப்பாளையம்-அன்னூர் சாலையில் இயங்கி வரும் வாழைக்காய் ஏல மையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வரத்து குறைந்ததால், விலை அதிகரித்து காணப்பட்டது.

இது குறித்து ஏல மைய நிர்வாகிகள் வெள்ளியங்கிரி, சின்னராஜ் கூறியது:

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்திற்கு, நெல்லித்துறை, பாலப்பட்டி, மூலத்துறை, லிங்காபுரம், காந்தவயல், அம்மன்புதூர், பவானிசாகர் நீர்த் தேக்கப்பகுதி மற்றும் திருச்சி அருகிலுள்ள காட்டுபுத்தூர், மோகனூர், தொட்டியூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வாழைத் தார்கள் விற்பனைக்கு வந்தன.

கதளி-300, நேந்திரம் 300, பூவன் 1000, ரொபஸ்டா-400, சாம்பல்-400, ரஸ்தாளி-150, செவ்வாழை-100 என மொத்தம் 3000 தார்கள் கொண்டுவரப்பட்டன.

இதில், கதளி கிலோ ரூ. 35-39 வரையும், நேந்திரம் கிலோ ரூ. 24-28 வரையும், பூவன் 1 தார் ரூ. 400-450 வரையும், சாம்பல் தார் ரூ. 450-500 வரையும், ரஸ்தாளி தார் ரூ. 400-450 வரையும் செவ்வாழை ரூ. 650-700 வரையும் விற்பனை ஆனது.

ஏலத்தில் கோவை, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களிலிருந்தும், கேரளம், மைசூர் பகுதிகளிலிருந்தும் வியாபாரிகள் பங்கேற்றனர்.

கடந்த வாரத்தை விட இந்த வாரம் 500 தார் வரை வரத்துக் குறைவாக இருந்ததுடன், தார் ரூ. 40 முதல் 50 வரையும் அதிகரித்து விற்றதால் விவசாயிகள்

மகிழ்ச்சி அடைந்தனர்.

## பல்லடம் கறிக்கோழி பண்ணைகொள்முதல்விலை உயர்வு

**பல்லடம்**

பல்லடம் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்

கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. சனிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.63 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால், ஞாயிற்றுக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.67 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

## உழவர் சந்தைகளில் ஒரே நாளில் ரூ.14.15 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை

**ஈரோடு:**

முகூர்த்த நாளையொட்டி உழவர் சந்தைகளில் ஒரே நாளில் ரூ.14.15 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனையாகியுள்ளன.

உழவர் சந்தைகளில் வெளிச்சந்தையைவிட குறைந்த விலையில் கிடைப்பதால், இங்கு நுகர்வோர் அதிக அளவில் காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர். குறிப்பாக, பண்டிகை காலங்கள் மற்றும் முகூர்த்த நாள்களில் உழவர் சந்தைகளில் காய்கறி விற்பனை அதிகரிக்கும்.

ஞாயிறு மற்றும் திங்கள்கிழமை முகூர்த்த நாள் என்பதால், உழவர் சந்தைகளில் காய்கறி விற்பனை அதிகரித்துள்ளது. ஈரோடு சம்பத் நகர் உழவர் சந்தையில் 187 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 23 டன் காய்கறிகள் ரூ.4 லட்சத்து 92 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில் 3,850 நுகர்வோர் பயனடைந்துள்ளனர். பெரியார் நகர் உழவர் சந்தையில் 59 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 6.1 டன் காய்கறிகள் ரூ.1 லட்சத்து 26 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில் 1,230 நுகர்வோர் பயனடைந்துள்ளனர். பெருந்துறை உழவர் சந்தையில் 13 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 2.8 டன் காய்கறிகள் ரூ.57 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில் 563 நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

கோபி உழவர் சந்தையில் 54 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 5.5 டன் காய்கறிகள் ஒரு லட்ச ரூபாய்க்கு விற்பனையானது.

இதில் 1,102 நுகர்வோர் பயனடைந்துள்ளனர். சத்தியமங்கலம் உழவர் சந்தையில் 55 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 5.5 டன் காய்கறிகள் ரூ.1 லட்சத்து 31 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில் 970 நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.தாராபுரம் உழவர் சந்தையில் 108 விவசாயிகள் கொண்டு

வந்திருந்த 12.2 டன் காய்கறிகள் ரூ.2 லட்சத்து 99 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில் 1,745 நுகர்வோர் பயனடைந்துள்ளனர். காங்கயம் உழவர் சந்தையில் 57 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 7.6 டன் காய்கறிகள் ரூ.2 லட்சத்து 10 ஆயிரத்துக்கு விற்பனையானது. இதில் 1,525 நுகர்வோர் பயனடைந்துள்ளனர்.

முகூர்த்த நாளையட்டி உழவர் சந்தைகளில் ஒரே நாளில் ரூ.14.15 லட்சத்திற்கு காய்கறிகள் விற்பனையாகியுள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வால்பாறை தோட்டங்களில் வீணாகும் தேயிலை

**வால்பாறை**

போதுமான தொழிலாளர்கள் இல்லாததால் வால்பாறை பகுதி தோட்டங்களில் உற்பத்தியாகும் தேயிலையைப் பறிக்க முடியாமல் தினசரி ஆயிரக்கணக்கான கிலோ தேயிலைகள் வீணாகி வருகின்றன.

வால்பாறை பகுதியில் பல்வேறு முன்னணி நிறுவனங்களுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. மொத்தமுள்ள தேயிலைத் தோட்டங்களில் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வந்த நிலையில், போதுமான சம்பளமின்மை, வனவிலங்கு அச்சுறுத்தல், பாதுகாப்பின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தொழிலாளர்கள் எண்ணிக்கை தற்போது 30 ஆயிரமாக குறைந்துள்ளதாக தெரிய வருகிறது.

தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தாலும், எஸ்டேட் நிர்வாகத்தினரின் தோட்டப் பரப்பளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனால், தேயிலை உற்பத்தியும் அதிகரித்து காணப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் தற்போது மழை, வெயில் என பருவநிலை மாறி, மாறி இருப்பதால், தோட்டங்களில் தேயிலை உற்பத்தி அதிக அளவில் உள்ளது.

20 தொழிலாளர்கள் இருக்கவேண்டிய ஒரு ஹெக்டேர் தேயிலைத் தோட்டத்தில், 10 தொழிலாளர்களை வைத்தே தேயிலை பறிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் குறிப்பிட்ட தினத்தில் பறிக்க முடியாமல் பல ஆயிரம் கிலோ தேயிலை வீணாகி வருவதாக எஸ்டேட் நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

கொழுந்து பறிக்கும் இயந்திரம் மூலமாக தேயிலை பறித்தால் மீண்டும் அந்தச் செடிகளில் தேயிலை துளிர்விட 45 தினங்கள் ஆகும், ஆனால், தொழிலாளர்கள் மூலமாக தேயிலை பறித்தால் 7 தினங்களில் அந்தச் செடிகளில் துளிர்விடுவதால், பெரும்பாலான எஸ்டேட் நிர்வாகத்தினர் இயந்திரத்தை பயன்படுத்தாமல் உள்ளனர். இந்நிலையில், தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்க அசாம், மத்தியப்பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து தொழிலாளர்களை அழைத்து வருவதில் எஸ்டேட் நிர்வாகத்தினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## உதகை தாவரவியல் பூங்கா புல்வெளிக்கு மெக் ஐவரின் பெயரை சூட்ட கோரிக்கை- ஏ.பேட்ரிக் -

**உதகை:**

உதகை தாவரவியல் பூங்கா புல்வெளிக்கு நீலகிரியின் தோட்டக்காரர் என அழைக்கப்படும் மெக் ஐவரின் பெயரை சூட்ட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

கோடை வாசஸ்தலம் என்றாலே நீலகிரியும், நீலகிரி என்றாலே உதகையும், உதகை என்றாலே மலர்களும், பழங்களும், மலைக்காய்கறிகளும்தான் நினைவுக்கு வரும்.

இதற்கான அடித்தளத்தை அமைத்தவர், இங்கிலாந்து நாட்டின் கியூ தாவரவியல் பூங்காவிலிருந்து ஆங்கிலேயர்களால் 1858ம் ஆண்டில் நீலகிரிக்கு அழைத்து வரப்பட்ட மெக் ஐவர். இங்கிலாந்து நாட்டில் விளையும் காய்கறிகளும், பழங்களும், மலர்களும் நீலகிரியில் வசித்து வந்த ஆங்கிலேயர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் பல்வேறு ஆராய்ச்சிகளுக்கு பின்னர் அதை நிகழ்த்திக் காட்டினார்.

இதற்காகவே தற்போது அரசினர் தாவரவியல் பூங்கா அமைந்துள்ள பகுதியில் மலைப் பகுதியில் விளையும் ஆங்கிலேய காய்கறிகளை சோதனை அடிப்படையில் பயிரிட்டார். விளைச்சலுக்கு பின்னர் அவற்றை விற்பனைக்கு கொண்டு சென்றதோடு, அதை பல்வேறு பகுதிகளிலிருந்த விவசாயிகளுக்கும் கொடுத்து அதை கூடுதலாக பயிரிடவும் ஊக்கப்படுத்தினார்.

தொடக்கத்தில் இங்கிலாந்து நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட அனைத்து வகையான காய்கறிகளும், பழங்களும், மலர்ச் செடிகளும் உதகையில் சோதனை முறையில் நடப்பட்டன. சில இடங்களில் மலர் ரகங்களும், சில இடங்களில் பழ வகைகளும், சில இடங்களில் மர வகைகளும் தங்களை தக்க வைத்துக் கொண்டன.

இதன் காரணமாகவே தமிழகத்தில் கோடை வாசஸ்தலங்களைத் தவிர வேறு எங்கும் காண முடியாத மலர் வகைகள் உதகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் அதிகளவிலும், மர வகைகள் குன்னூர் மற்றும் சுற்றுப்பகுதிகளில் அதிகளவிலும், ஏனைய பகுதிகளில் பழ வகைகளும் அதிகளவில் காணப்படுகின்றன. இங்கிலாந்துக்கு நிகரான தட்பவெப்பநிலை நீலகிரியில் நிலவியதால், இங்கிலாந்து நாட்டில் விளையும் பெரும்பாலான பழங்கள், காய்கறிகள், மலர்கள் உள்ளிட்டவற்றை நீலகிரியில் விளைவிக்க வேண்டுமென்பதே மெக் ஐவரின் குறிக்கோளாக இருந்தது.

இதை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் கேத்தி பகுதியில் ஆப்ரிகாட், பிரட் ஃப்ரூட், ஆல்மண்ட்ஸ், செர்ரி, அத்தி, திராட்சை, மல்பெரி, ஆப்பிள், பெர்ரி, பீச், பிளம், பேரி உள்ளிட்ட 53 வகையான பழ ரகங்களையும் பயிரிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாக, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ராம்சுந்தர் தெரிவித்தார்.

எனவே, மெக் ஐவரின் 138-வது நினைவு தினத்தைக் குறிக்கும் வகையில், உதகை அரசினர் தாவரவியல் பூங்காவிலுள்ள பரந்த புல்வெளிக்கு அவரது பெயரையே சூட்ட வேண்டுமென, நீலகிரி டாக்குமென்டேசன் அமைப்பின் இயக்குநர் வேணுகோபால் கோரிக்கை விடுத்துள்ளார்.

மெக் ஐவரின் 30 ஆண்டு கால இந்திய வாழ்க்கையில் நீலகிரியின் விவசாய வளர்ச்சிக்கு அவரது சேவையே அடித்தளமாக அமைந்திருந்ததால், இக்கோரிக்கையை தமிழக அரசும் நிறைவேற்ற வேண்டுமென்பதே அனைவரது எதிர்பார்ப்பு.

## நிலக்கடலை சாகுபடியில் முளைப்புத் திறனை பரிசோதனை செய்ய அறிவுறுத்தல்

**வேலூர்:**

வேலூர் மாவட்டத்தில் தற்போது பரவலாக மழை பெய்துவரும் நிலையில் ஜூன்

மாதத்தில் மானாவாரி நிலக்கடலை சாகுபடி செய்வ நல்ல வருவாய் பெறலாம் என்று வேலூர் விதை பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் கி.கலைச்செல்வி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது செய்திக் குறிப்பு: மானாவாரி பயிருக்கு குறைந்த நீர், உரம், பயிர் பாதுகாப்பு மருந்து பயன்படுத்தினால் நல்ல மகசூல் கிடைக்கும். டிஎம்வி 7, விஆர்ஐ 2 வீஆர்ஐ (ஜிஎன்) 5 ஆகியவை பயிரிட ஏற்ற ரகங்கள் ஆகும்.

இவற்றில் ஏதேனும் ஒரு ரகத்தைத் தேர்வு செய்து நல்ல தரமான விதையை ஏக்கருக்கு 56 கிலோ என்ற அளவில் 30 செ.மீ. வீதம் வரிசைக்கு வரிசை மற்றும் செடிக்கு செடி 10 செ.மீட்டர் இடைவெளியில் விதைகளை விதைப்பு செய்ய வேண்டும்.

5 வரிசை நிலக்கடலையும், ஒரு வரிசை காராமணியும் சாகுபடி செய்து சிகப்பு கம்பளி புழுவைக் கட்டுப்படுத்தலாம்.

நிலக்கடலைக்கு ஏக்கருக்கு 4:4:18 என்ற விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்து இட வேண்டும். இத்துடன் 80 கிலோ ஜிப்சத்தை அடியுரமாகவும், 80 கிலோ ஜிப்சத்தை 2-ம் களையெடுப்பின்போதும் இட்டு நன்கு மண் அணைக்க வேண்டும்.

தரமான விதைகளே உயர் விளைச்சலுக்கு வழிவகுக்கும். அதன் தரத்தை அறியாமல் விதைப்பு செய்தால் விதைப்பு செய்த பிறகு பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்றார் கலைச்செல்வி.

## ரூ. 90 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

**திருச்செங்கோடு:**

திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் சனிக்கிழமை ரூ. 90 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 2100 மூட்டை மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.

இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ. 90 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ. 5899 முதல் ரூ. 6879 வரை விற்பனையானது, கிழங்கு ரகம் ரூ. 4777 முதல் ரூ. 5809 வரை விலை போனது. பனங்காளி ரகத்துக்கு ரூ. 7199 முதல் ரூ. 13119 வரை விலை கிடைத்தது.

ஈரோடு மஞ்சள் சந்தையைவிட 500 மூட்டை அதிக வரத்து வந்தது என்று கூட்டுறவுச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார். விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

**"மாதத்துக்கு 10,087 டன் அரிசி விநியோகம்**

**'தஞ்சாவூர்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட அங்காடிகள் மூலம் மாதத்துக்கு 10,087 டன் அரிசி வழங்கப்படுகிறது என்றார் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம்.

தஞ்சாவூர் அருகேயுள்ள ராமநாதபுரம் ஊராட்சிக்கு உள்பட்ட சரஸ்வதி நகரில் சனிக்கிழமை மாலை நடைபெற்ற புதிய முழு நேர நியாய விலைக் கடைத் திறப்பு விழாவில் அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் மொத்தம் 1,165 பொது விநியோகத் திட்ட அங்காடிகள் உள்ளன. இவற்றின் மூலம் 6 லட்சத்து 44 ஆயிரத்து 412 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதத்துக்கு 10,087 டன் அரிசியும், 1,157 டன் சர்க்கரையும், 424 டன் கோதுமையும், 914 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயும், 455 டன் துவரம் பருப்பும், 119 டன் உளுந்தும், 544 டன் பாமாயிலும் வழங்கப்படுகின்றன.

தமிழக முதல்வரின் உத்தரவுப்படி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சரஸ்வதி நகர் முழு நேர அங்காடியில் 527 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடையின் மூலம் சரஸ்வதி நகர், பொதிகை நகர், வனதுர்கா நகர், பார்வதி நகர், காந்திபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் நெடுந்தொலைவு செல்வதைத்

தவிர்த்து, அருகிலேயே அத்தியாவசிய பொருள்களை வாங்கிப் பயனடையலாம் என்றார் வைத்திலிங்கம்.

விழாவில் மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம். ரெங்கசாமி, எம். ரெத்தினசாமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் அமுதாராணி ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## <u>பண்ணை முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி பெறலாம்</u>

**பெரம்பலூர்:**

பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பண்ணை முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி பெறலாம் என்று மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொறுப்பு) ப. விஜயலட்சுமி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பண்ணை முறையில் லாபகரமான நாட்டுக்கோழி வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ், ஜூன் 12-ம் தேதி ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் ஒரு நாள் இலவச பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில், வர்த்தக முறையில் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் விற்பனை யுக்தி, அதற்கான முதலீடு, கொட்டகை அமைத்தல், தீவன மேலாண்மை, நோய் மேலாண்மை உள்ளிட்ட தலைப்புகளின் கீழ் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், 8754114165 என்ற எண்களில் தொடர்பு கொண்டு தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம் என்றார்.

விவசாயத் தொழில் குழுக்களுக்கு ரூ. 17.51 லட்சம் நிதியுதவி

தூத்துக்குடி:ஓட்டப்பிடாரத்தில் விவசாயத் தொழில் குழுக்களுக்கு ரூ. 17.51 லட்சம் நிதியுதவியை ஆட்சியர் ம. ரவிக்குமார் சனிக்கிழமை வழங்கினார்.

ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் விவசாயத் தொழில் குழுக்கள் உள்கட்டமைப்பு நிதி வழங்கும் விழா சனிக்கிழமை நடைபெற்றது. இதில், மாவட்ட ஆட்சியர் ம. ரவிக்குமார் கலந்து கொண்டு 18 குழுக்களுக்கு ரூ. 17.51 லட்சம் நிதியுதவியை வழங்கி,அவர் பேசியது:

எந்தத் துறையில் அரசின் ஈடுபாடு இருக்கிறதோ அங்கு உற்பத்தியாளர்களும் ,

பொதுமக்களும் பயன்பெறுகிறார்கள். விவசாயிகள் தாங்கள் அடையும் பலன்களையும், மேன்மைகளையும் பிறருக்கு கூற வேண்டும். விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலையும், அந்தப் பொருள்கள் நுகர்வோர்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்க வேண்டும்.

ஆனால், பெரும்பாலான வியாபாரங்களில் உற்பத்தியாளர்களுக்கும் , நுகர்வோர்களுக்கும் இடையில் இடைத்தரகர்களே அதிக லாபம் பெறுகின்றனர். அரசின் பல திட்டங்கள் 100 சதவிகித மாநியங்களில் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. ஆனால் அதை பெறுவதற்கு நான்கைந்து இடங்களுக்கு நீங்கள் செல்ல வேண்டியுள்ளது.

புதுவாழ்வுத் திட்டம் மூலம் குழுக்களுக்கு அனைத்து உதவிகளையும் செய்கிறது. காய்கனிகள் உற்பத்திச் சார்ந்த வேளாண்மை தொழில் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுவருகிறது. நீங்கள் பெறப்பட்ட நிதியுதவியை தகுந்த முறையில் பயன்படுத்தி விவசாய பொருள்களை உற்பத்தி செய்து உங்களுக்கும் , நுகர்வோர்களுக்கும் லாபம் கிடைக்க வழிவகை செய்யவேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில், ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் காந்தி என்ற காமாட்சி, புதுவாழ்வுத் திட்ட மாவட்ட திட்ட மேலாளர் தரணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கனகராஜ், வேளாண் துணை இயக்குநர் குருமூர்த்தி, உதவி இயக்குநர் (தோட்டக்கலை) பழனிவேலாயுதம், ஓட்டப்பிடாரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கொ. ராஜாமணி, சு.கணபதி உள்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**விதைகள்தான் விளைச்சலை தீர்மானிக்கும்:வேளாண் துறை தகவல்**

**திருநெல்வேலி:**

தரமான விதைகள்தான் நல்ல விளைச்சலை தீர்மானிக்கும் முக்கிய காரணி என வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக திருநெல்வேலி விதை பரிசோதனை அலுவலர் மூ.மு.முகம்மதுகாசீம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் முளைப்புத்திறன்,

புறத்தூய்மை, ஈரப்பதம், பிறரகக் கலவன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயிர் சாகுபடிக்குத் தேவையான முக்கிய இடுபொருள்களில் முதன்மையானது விதை. அந்த விதை தரமானதாக இருந்தால்தான் விளைச்சல் அதிகமாக இருக்கும். பயிர் அறுவடை முடிந்து, கதிரடித்து பிரிக்கப்படும் விதை உடனடியாக விதைப்பதற்கோ, நடவு செய்வதற்கோ தகுதியானதாக இருக்காது. அந்த விதைகளுடன் மண், சிறுகற்கள், இலைகளின் துகள்கள், குச்சி, சாவி விதைகள் கலந்து இருக்கும். எனவே, அறுவடை முடிந்து பிரித்தெடுக்கப்படும் விதைகளை விதைச் சுத்திகரிப்பு செய்து பிற பொருள்களுடன் கலப்பின்றியும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்.

திருநெல்வேலி விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் மேற்கொள்ளப்படும் புறத்தூய்மை சோதனையின்போது தூய விதைகள், களைவிதைகள், பிறதானிய விதைகள் மற்றும் உயிர்ப்பற்ற பொருள்கள் கலந்துள்ளனவா எனக் கண்டறியப்படுகிறது.

நெல், பயறுவகை, சிறுதானியம், சூரியகாந்தி, பருத்தி பயிர்களுக்கு புறத்தூய்மை 98 சதவீதம் இருத்தல் அவசியம். எனவே, விவசாயிகள் தாங்கள் சேமிக்கும் விதையை தூய விதையாக சேமித்தல் அவசியம் என அக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆடு, மாடுகள் வளர்ப்பதற்கு இலவசமாக கொட்டகை

**கடலூர்:**

ஆடு,மாடுகள் வளர்ப்பதற்கு அரசு செலவில் இலவசமாக கொட்டகை அமைத்து கொடுக்கப்படுகிறது.

தமிழகத்தில் முதல்வரின் சிறப்பு திட்டத்தில் ஏழைகளுக்கு கறவை மாடுகள், ஆடுகள் ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆடு, மாடு மற்றும் கோழி வளர்ப்பை மேலும் ஊக்குவிக்கும் வகையில் அரசு புதிய திட்டத்தை செயல்படுத்த இருக்கிறது. இதில் ஆடு, மாடு, கோழி வளர்ப்போருக்கு இலவசமாக கொட்டகை அமைத்து கொடுக்கப்பட இருக்கிறது. இதற்காக பயனாளிகளை தேர்வு செய்யும்படி அரசு உத்தரவிட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தில் பயன் பெறுவதற்கு ஒருவர் 5 கறவை மாடுகள் அல்லது 20 வெள்ளாடுகள் அல்லது 100 கோழிகளை வளர்த்து வருபவராக இருக்க வேண்டும். மேலும், இந்த கால்நடைகளை கொட்டகை அமைத்து பராமரிக்க இடம் இருக்க வேண்டும். அதுபோன்ற நபர்களை தேர்வு செய்து அரசு செலவில் இலவசமாக கொட்டகை அமைத்து கொடுக்கப்படுகிறது.

இதற்கான பயனாளிகளை தேர்வு செய்யும் பணியில் கால்நடை பராமரிப்புத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

**<u>சிறுத்தை வசிக்கும் செங்காட்டு மலை!ஜெ.பாபு</u>**

**செஞ்சி:**

செஞ்சி அருகே அன்னமங்கலத்தில் உள்ள செங்காட்டு மலையில் 60 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுத்தைகள் நடமாட்டம் இருந்துள்ளது. அந்த சிறுத்தைகளைப் பிடிக்க மலையில் உள்ள சிறு குகைகளை மக்கள் பொறியாக பயன்படுத்தி வந்துள்ளனர்.

மலைகளால் சூழ்ந்த நகரம் செஞ்சி. இதனையொட்டிய அன்னமங்கத்தில் உள்ளது செங்காட்டு மலை. இந்த மலை சித்தேரி, சாத்தனந்தல், சோழங்குணம், சமத்தகுப்பம், கெங்கவரம் உள்ளிட்ட கிராமங்கள் வரை 1000 சதுர ஏக்கர் நிலப்பரப்பில் 10 கிமீ சுற்றளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது.

இந்த மலையில் தொன்று தொட்டு சிறுத்தைப்புலி நடமாட்டம் இருந்துள்ளது. இரு ஆண்டுகளுக்கு முன்பு வரை நீர்வளம் மற்றும் ஏராளமான மரங்களுடன் காணப்பட்ட இந்த மலையில் நீர்வளம் காட்டு பன்றி, மான், முயல், காட்டு குரங்கு உள்ளிட்ட விலங்குகள் அதிகளவில் வாழ்ந்து வந்தன. தற்போது கடும் வறட்சி காரணமாக இங்குள்ள காடுகள் அழிந்து, விலங்குகள் இடம்பெயர்ந்து வருகின்றன.

அன்னமங்கலம் மலைப் பகுதியில் வசிக்கும் சிறுத்தைப்புலியும் இரையைத் தேடி மலையை விட்டு கீழே இறங்கி குடியிருப்பு பகுதியை நோக்கி வருகிறது. இதன் காரணமாக கடந்த 3 மாதங்களாக அன்னமங்கலம், சமத்தக்குப்பம் உள்ளிட்ட கிராமங்களில் ஆடு, மாடு மற்றும் நாய்களை அடித்து கொன்று வருகிறது. இதையடுத்து வனத்துறையினர் நேரில் ஆய்வு செய்தபோது இங்கு சிறுத்தைப்புலி

நடமாட்டம் உள்ளதாகவும் பொது மக்கள் இரவு நேரங்களில் நடமாட வேண்டாம் எனவும் எச்சரித்தனர். சிறுத்தையைப் பிடிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது குறித்து அன்னமங்கலத்தைச் சேர்ந்த ஆசிரியர் என்.முனுசாமி என்பவர் கூறியது:

3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இந்த மலைப் பகுதியில் புதிய கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இந்த மலையில் சிறுத்தை நடமாட்டமும் உள்ளது. அதனைப் பிடிக்க அந்த காலத்திலேயே இங்கு மலைக் குகைகளில், மக்கள் பொறிக் கூண்டு அமைத்துள்ளனர். இதுபோன்று அன்னமங்கலம் மலையைச் சுற்றி 10 பொறி கூண்டுகள் காணப்படுகின்றன. இதேபோல சாத்தனந்தல், சோழங்குணம், கீழ்தாங்கல், சித்தேரி, பென்னகர், மேல்எடையாளம் சமத்தகுப்பம் கிராமங்களில் இந்தப் பொறி உள்ளது.

60 ஆண்டுகளுக்கு முன்பு செங்காட்டு மலையில் இருந்து குடியிருப்பு பகுதிக்கு வந்து முனுசாமி என்பவரை சிறுத்தைப் புலி அடித்துக் கொன்றுள்ளது. அந்த சிறுத்தையை சுட்டுக் கொன்ற ராஜூ என்பவருக்கு அரசு வெகுமதி அளித்துள்ளது.

தற்போது கோடை காலமான ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் சிறுத்தை நடமாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. இரவு நேரங்களில் அது மலையை ஒட்டி இறங்கி வரும். அப்போது அங்குள்ள ஆடு, மாடு, நாய்களை கொன்று சாப்பிட்டு விடுகிறது. வனப்பகுதி என்பதால் அரசு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

ஒரு ஆட்டை அடித்து கொன்று விட்டால், ரூ.2500 வனத்துறையினர் வழங்க வேண்டும். இது போன்று மாடு, கன்றுகுட்டிக்கு உள்ளிட்டவைக்கும் அதற்கேற்றால் போல் நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

அதே போல மக்களின் அச்சத்தையும் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் 750 மூட்டை பருத்தி ரூ12 லட்சத்துக்கு ஏலம்</u>

**நாமக்கல், :** நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 750 மூட்டை பருத்தி தி12 லட்சத்திற்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. மொத்தம் 750 பருத்தி மூட்டைகளை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.பின்னர், நடைபெற்ற ஏலத்தில் ஆர்சிஎச் ரகம் ஒரு குவிண்டால் ரூ4400 முதல் ரூ4950 வரையும், சுரபி ரகம் ஒரு குவிண்டால் ரூ4900 முதல் ரூ5200 வரையும் என மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ12 லட்சத்துக்கு ஏலம் போனது. பருத்தி அறுவடை சீசன் முடிந்துள்ளதால் சங்கத்துக்கு பருத்தி வரத்து குறைந்துள்ளதாக சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

### <u>ஆடு வளர்ப்பு பயிற்சி 12ம் தேதி நடக்கிறது</u>

**நாமக்கல், :** நாமக்கல்லில் வரும் 12ஆம் தேதி வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வளர்ப்பில் நோய் பராமரிப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் நடைபெறுகின்றது.இது குறித்து வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 12ம் தேதி காலை 9 மணிக்கு ஆடுகள் வளர்ப்பில் நோய் பராமரிப்பு குறித்த இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இதில், செம்மறியாடு, வெள்ளாடுகளுக்கு ஏற்படும் நோய்கள், அதன் தாக்கம், தடுப்பு

முறைகள் குறித்தும், நோய் தாக்கம் ஏற்படும் கால அட்டவணைக்கு ஏற்பத் தடுப்பூசி அளிக்கும் முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் விவசாயிகள், பண்ணையாளர்கள் உள்ளிட்டவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலை கால்நடை மருத்துவக்கல்லூரி வளாகத்திலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்தை நேரில் அல்லது 0428-6266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் வரும் 11ம் தேதிக்குள் தங்கள் பெயரை பதிவு செய்து கொண்டு, கலந்து கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.